# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்*

---

*(2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2010, திசெம்பர் மாதம் 10 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்**

[2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 15/2010

**சீட்டாட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்கள் எந்த இடப்பரப்புகளில் தங்கள் தாபனங்களை நிறுவ முடியுமோ அந்த இடப்பரப்புக்களை பெயர் குறிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்பட லாம்.

சீட்டாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்துதல் மீதான தடை.

**2.** (1) ஆளெவரும், 2012, சனவரி 1 ஆம் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அமைச்சரால் அதன்பொருட்டு வழங்கப்படும் செல்லுபடியான உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழன்றி வர்த்த மானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் குறித்தொதுக்கப்படவேண்டிய குறிப்பிட்ட ஓர் இடப்பரப்பிற்குள், சீட்டாட்டத்தொழிலொன்றில் ஈடுபடுதலாகாது.

(2) எந்த அமைச்சருக்கு சூதாட்டம் என்னும் விடயம் குறித் தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலா ளர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, சீட்டாட்டத் தொழிலொன்றைக் கொண்டுநடாத்துவதற்கான உரிமங்களைப் பெற வேண்டிய தேவைப்பாடு பற்றி பொதுமக்களுக்குப் போதுமான அறிவித்தல் கொடுத்து தினசரி செய்தித்தாள் ஒன்றில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அறிவித்தலொன்றை வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் சீட்டாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்தும் ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடியவொரு காலப்பகுதிக்கு இருவகை

யிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து மில்லியன் ரூபா குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*உரிமம் நியதி நிபந்தனைகளுக்கு அமைவாதல்.*

**3.** இரண்டாம் பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட உரிமம் அதன்கண் குறித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும். நியதி நிபந்தனைகளைத் தருவதில் பின்பற்றப்படவேண்டிய கட்டளைக்கற்களையும் ஓர் உரிமத்துக்காக விண்ணப்பிக்கும் முறையையும் உரிமம் வழங்குவதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையையும் குறித்துரைத்து ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

*ஒழுங்கு விதிகள்.*

**4.** (1) அமைச்சர் இச்சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றிற்குப் பயனளிக்கும் நோக்கத்திற்கு ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சர், குறிப்பாக, (1) ஆம் உட்பிரிவால் அளிக்கப்பட்ட தத்துவத்தின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் விடயங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) எந்த விடயம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் விடயம் ;

(ஆ) உரிமம் ஒன்றிற்கான விண்ணப்பப்படிவமும் அதற்காக செலுத்தப்படவேண்டிய கட்டணங்களும் ; அத்துடன் அவ்வாறு வழங்கப்பட்ட உரிமமொன்று சீட்டாட்ட நிலையமொன்றில் ஆடப்படும் பணயத்துக்கான வெவ்வேறு ஆட்டங்கள் தொடர்பில் எந்தக் காலப் பகுதிக்கு செல்லுபடியாகுமோ அந்தக் காலப்பகுதி ; அத்துடன் எவையேனும் தோதான மேற்பார்வை வழிமுறைகள் ;

(இ) உரிமங்கள் வழங்குவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் ;

(ஈ) உரிமங்களை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கை முறை.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதிப்படக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**5**. இச்சட்டத்தின் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி - பொருள் கோடல்.

"சீட்டாட்ட நிலையம்" என்பது,

(அ) கொடுப்பனவுடனோ கொடுப்பனவின்றியோ;

(ஆ) உரிமையென்ற வகையாகவோ அல்லது அவ்வாறின்றியோ,

பணயத்துக்காக ஏதேனும் ஆட்டத்தை ஆடுவதற்காகத் தனியாட்கள் அணுகுகையைக் கொண்டுள்ள எவையேனும் வளவுகள் என்று பொருளாகும் என்பதுடன், பக்கரட், பண்ட்டோபங்கோ, பிக் சிக்ஸ், ப்லக் ஜக், போல், செமின்-டி-பேர், சக்-எ-லக், க்றவுண் அன்ட் அங்க்கர், பாரோ, பாரோ பாங்க், ஹசாட், போக்கர் டைஸ், பொன்ட்டுன், அமெரிக்கன் பிரென்ச் ரூலெட், ட்ரென்ட்-எட்-குவான்ட், விங்கட்-எட்-உம் அல்லது வீல் ஒவ் போர்ச்சியூன் ஆட்டத்தை அல்லது வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் காலத்துக்குக்காலம் அமைச்சர் குறித்துரைக்கக்கூடிய வேறேதேனும் ஆட்டத்தை ஆடுவதையும் உள்ளடக்கும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்